# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590


## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 18643/SCIC/2025**

திரு.த.விஜயன் - மேல்முறையீட்டாளர்
எண்.5-B, செல்சினி காலனி
3-வது தெரு கிழக்கு
தூத்துக்குடி - 628 008
Phone: 90925 87200.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
2 எண். இணை சார்பதிவாளர்
2 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம் - 628 002.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **12.09.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.10.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 22.10.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 18.11.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 24.12.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12/09/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அவர்கள், தூத்துக்குடி எண்.2 சார்பதிவாளர் அலுவலகம், போல்பேட்டை, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி, அதில் "தூத்துக்குடி தாலுக்காவிற்கு பகுதிக்கு உரிய எண்.2 இணை சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளக்கு நன்கொடையாக (பொது திறவிடப்பகுதிகளுக்கு) வழங்கப்பட்ட தான பத்திரம் தொடர்பான ஆவணங்கள்

பதிவேடுகள் கோப்புகள் மற்றும் அலுவலக 1 புத்தக குறிப்புகள் அதன் தொடர்புடைய முழு விவரங்களை. தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005, பிரிவு 2(J)-ன்கீழ் கள ஆய்வுக்கு அனுமதி வழங்க கேட்டுக் கொள்கிறேன்" என்பன போன்று 3 (மூன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.த.விஜயன் அவர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.ச.சோலை ராமமூர்த்தி, இளநிலை உதவியாளர், 2 எண்.இணை சார்பதிவாளர் அலுவலகம், தூத்துக்குடி அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 13/10/2025 மற்றும் 18/11/2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், தனக்கு அளித்த பதில்கள் தவறானவையாக அமைந்துள்ளது எனக் கூறினார்.

**3. எனவே, மனுதாரர், பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு 13/08/2026 அன்று காலை 11.00 மணிக்கு செல்ல வேண்டுமென்றும், பொதுத் தகவல் அலுவலர் (பொ) மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-ல் கோரிய தகவல்களுக்கு தொடர்பான ஆவணங்களை / பதிவேடுகளை தயார் நிலையில் வைத்திருந்து, அதனை மனுதாரர் பார்வையிடச் செய்வதோடு, மனுதாரர் கோரும் ஆவணங்களின் நகல்களை சான்றொப்பமிட்டு அளிப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கை (Compliance Report) யினை 31/08/2026-க்குள் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18643/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
2 எண். இணை சார்பதிவாளர்
2 எண். இணை சார்பதிவாளர் அலுவலகம்
தூத்துக்குடி மாவட்டம் - 628 002.

**மேல்முறையீட்டாளர்**

திரு.த.விஜயன்
எண்.5-B, செல்சினி காலனி
3-வது தெரு கிழக்கு
தூத்துக்குடி - 628 008
Phone: 90925 87200.

RG/Sr.PC